# ஆலமரம்



ஆலமரம் ஓங்கி அடர்ந்து, அதிக நிலப்பரப்பில் வளரக்கூடியவை. பிகஸ் பெங்காலெனிசிஸ் என்ற அறிவியல் பெயர் கொண்டது ஆலமரம். இந்தியாவின் தேசிய மரமாக ஆலமரம் திகழ்கிறது. ஆலமரத்தின் கிளைகளும், விழுதுகளும், வேகமாக வளரும். ஆலமரத்தின் விழுது நீளமாக வளர்ந்து, தரையில் வீழ்ந்து, புதிய வேர் உருவாகும். ஆலமரத்தின் வேர்கள் கடினமானதாக இருக்கும்.

ஆலமரத்திலிருந்து விழும் விதைகளிலிருந்து புதிதாக ஒரு செடி வளரும். ஆலமரத்தின் இலைகள் தடிமனாகவும், நீள்வட்டமாகவும் காணப்படும். ஆலமரத்தில் காணப்படும் சிறிய பழங்கள், சிவப்பு வண்ணமாக இருப்பதால் அதனை பறவைகள் விரும்பி உண்ணும்.



ஆலமரம் அதிக காலம் வாழக்கூடியவை. சென்னை அடையாரில் உள்ள ஆலமரம் 400 ஆண்டுகள் பழமையானது. ஆலமரம் பொதுவாக இந்தியா, தாய்லாந்து, பங்களாதேஷ் ஆகிய தெற்காசிய நாடுகளில் காணப்படும்.

ஆலமரத்தின் விழுதுகளை, குழந்தைகள் பிடித்து விளையாட விரும்புவர். ஆலமரத்தின் பல பாகங்கள் மருத்துவத்திற்கு பயன்படும். ஆலமரம் வெப்பத்தை உள்வாங்கிக் கொண்டு, குளிர்ச்சியை தருவதுடன், ஒரு அமைதியான சூழ்நிலையையும் உருவாக்குகின்றது. ஆலமரம் அடர்ந்து வளர்ந்திருப்பதால், கிராமங்களில் ஊர்க்கூட்டம் ஆலமரத்தடியில் நடைபெறும்.

